உச்சம் தொட்ட எலுமிச்சை விலை

பாளையங்கோட்டை சந்தையில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள எலுமிச்சை பழங்கள்.

திருநெல்வேலி, ஏப். 29: திருநெல்வேலி மாவட்டத்தில் கோடை வெயிலின் தாக்கம் காரணமாக வரலாறு காணாத வகையில் எலுமிச்சை பழம் விலை உயர்ந்துள்ளது. அதிகபட்சமாக கிலோ ரூ.320 வரை விற்பனையாகி வருகிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில் சாலைகளில் கானல் நீர் தென்படும் அளவுக்கு கடந்த 10 நாள்களுக்கும் மேலாக கடுமையான வெயில் நிலவியதால் வெப்பத்தின் தாக்கம் மக்களை வாட்டி வதைத்து வந்தது. இதனால் சாலையோரங்களில் இளநீர், சர்பத் உள்ளிட்ட குளிர்பானங்களின் விற்பனை அதிகரித்தது. சர்பத் கடைகளில் எலுமிச்சை பழம் தேவை அதிகரித்த நிலையில் அதன் விலையும் கடுமையாக உயர்ந்தது. கடந்த 4 நாள்களில் மட்டும் எலுமிச்சை பழத்தின் விலை கிலோவுக்கு ரூ.150 வரை உயர்ந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

திருநெல்வேலி நகரத்தில் உள்ள நயினார்குளம் மொத்த காய்கறி மார்க்கெட்டுக்கு தினமும் 5 டன் முதல் 6 டன் வரை எலுமிச்சை பழங்கள் விற்பனைக்கு வருகின்றன.

மேலும், மகாராஜநகர் உள்ளிட்ட உழவர் சந்தைகளிலும் எலுமிச்சை பழங்கள் விற்பனைக்கு வரும். நயினார்குளம் மொத்த காய்கறி மார்க்கெட்டுக்கு பெரும்பாலும் புளியங்குடி மார்க்கெட்டில் இருந்து எலுமிச்சை பழம் அதிகமாக வருகிறது. தற்போது, கோடை வெயிலால் உற்பத்தி பாதிக்கப்பட்டு அங்கிருந்து எலுமிச்சை வரத்து குறைந்துவிட்டது.

கடந்த வாரம் ஒரு கிலோ எலுமிச்சை விலை ரூ.80 முதல் ரூ.100 வரை இருந்தது. தற்போது மொத்த விற்பனை விலைக்கு 1 கிலோ ரூ.250 முதல் ரூ.300 வரையிலும், சில்லறை விற்பனையில் கிலோ ரூ.320 வரையிலும் விற்பனை செய்யப்படுகிறது. ஒரு எலுமிச்சை பழம் ரூ.20 முதல் ரூ.25 வரை விற்பனை செய்யப்படுகிறது.

நெல்லை மாவட்டத்தில் 19,450 தபால் வாக்குகள்

திருநெல்வேலி மாவட்ட 5 பேரவைத் தொகுதிகளின் வாக்கு எண்ணும் மையமான அரசு பொறியியல் கல்லூரியில் சிசிடிவி கேமராக்கள் மூலம் வேட்பாளர்களின் முகவர்கள், அரசு அலுவலர்கள் கண்காணித்து வருவதை புதன்கிழமை ஆய்வு செய்கிறார் மாவட்ட தேர்தல் அலுவலரும், ஆட்சியருமான இரா.சுகுமார்.

திருநெல்வேலி, ஏப்.29: சட்டப்பேரவைத் தேர்தலில் திருநெல்வேலி மாவட்டத்தில் 19,450 பேர் தபால் வாக்களித்துள்ளனர்.

இது தொடர்பாக மாவட்ட தேர்தல் அலுவலரும், ஆட்சியருமான இரா.சுகுமார் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு கடந்த 23-ஆம் தேதி நடைபெற்றது. இதில், திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள திருநெல்வேலி, அம்பாசமுத்திரம், பாளையங்கோட்டை, நான்குனேரி, ராதாபுரம் ஆகிய 5 தொகுதிகளில் பதிவான வாக்குகள் திருநெல்வேலி அரசு பொறியியல் கல்லூரி அமைக்கப்பட்டுள்ள வாக்கு எண்ணும் மையத்தில் மே 4ஆம் தேதி எண்ணப்படவுள்ளன.

வாக்குகள் எண்ணும் பணி காலை 8 மணிக்கு தொடங்கும். முதலில் தபால் வாக்குகள் எண்ணப்படும். காலை 8.30 மணிக்கு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் பதிவான வாக்குகளை எண்ணும் பணி தொடங்கும். இதன் கடைசி சுற்று மட்டும் தபால் வாக்குகள் எண்ணி முடிக்கப்பட்ட பிறகே தொடங்கும்.

ஒரு பகுதியில் 500 தபால் வாக்குகளுக்கு ஒரு மேசை என்ற விகிதத்தில் தபால் வாக்குகளும், மற்றொரு பகுதியில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் பதிவான வாக்குகளும் எண்ணப்படும். இரண்டிற்கும் தனித்தனியாக மேற்பார்வைக்காக உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் நிலையில்அலுவலர்கள் நியமிக்கப்படுவர்.

தேர்தல் பணியாளர்கள், காவல் துறை அலுவலர்கள், மண்டலக் குழுக்களில் பணிபுரிந்த அலுவலர்கள் மற்றும் தேர்தல் கண்காணிப்பு குழுக்களில் பணியாற்றிய அலுவலர்கள் என இம்மாவட்டத்தில் மொத்தம் 8,770 தேர்தல் அலுவலர்கள் தபால் வாக்களித்துள்ளனர். மேலும், 3,754 அலுவலர்கள் தேர்தல் பணி சான்றிதழ் பெற்று நேரடியாக வாக்குச்சாவடிகளில் வாக்களித்துள்ளனர்.

85 வயதுக்கு மேற்பட்ட வாக்காளர்கள் மற்றும் மாற்றுத்திறனாளி வாக்காளர்கள் அளித்த படிவம் 12ஈ விண்ணப்பத்தின் பேரில், மொத்தம் 6,424 வாக்காளர்கள் தபால் வாக்கு மூலம் வாக்களித்துள்ளனர். இதுவரை சேவை வாக்காளர்கள் 682 பேர் வாக்களித்துள்ளனர். இவர்களின் பதிவான தபால் வாக்குகள் வாக்கு எண்ணிக்கைக்கு முன்பு வரை (அதாவது வாக்கு எண்ணிக்கை தொடங்கும் வரை) பெறப்படும். வாக்குச்சாவடிகளில் 9,85,676 பேர் (77.9%) வாக்களித்துள்ளனர் எனக் கூறியுள்ளார்.

பாரதிதாசன் பிறந்த நாள் விழா

பாரதிதாசன் உருவப் படத்துக்கு மலர் தூவி மரியாதை செலுத்திய நிர்வாகிகள்.

திருநெல்வேலி, ஏப்.29: பொதிகைத் தமிழ்ச் சங்கம் சார்பில் பாவேந்தர் பாரதிதாசனின் பிறந்தநாள் விழா பாளையங்கோட்டையில் உள்ள அச்சங்க அலுவலகத்தில் புதன்கிழமை நடைபெற்றது.

இந்த விழாவுக்கு பொதிகைத் தமிழ்ச் சங்கத்தின் நிறுவனர் கவிஞர் பே. இராஜேந்திரன் தலைமை வகித்தார். சங்கச் செயற்குழு உறுப்பினர் இரா.ரெங்கராஜன் வரவேற்றார். சிறுமிகள் மதிவதனி, மதுபாலா ஆகியோர் பாரதிதாசன் பாடல்களைப் பாடினர். பாரதிதாசனின் படைப்புகள் பற்றி கவிஞர் பே.ராஜேந்திரன், திருக்குறள் இரா.முருகன் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

பாரதிதாசன் உருவப்படத்துக்கு மாலை அணிவித்து மலர்கள் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் எழுத்தாளர் தளவாய், குறும்பட இயக்குநர் லெனின், கவிஞர் வீரை மைதீன் உள்பட பலர் கலந்துகொண்டனர். வி.டி.ராஜன் நன்றி கூறினார்.

'பொது இடங்களில் கழிவுகளை கொட்டும் வாகனங்கள் பறிமுதல்'

திருநெல்வேலி, ஏப். 29: திருநெல்வேலி மாநகரப் பகுதியில் சேகரிக்கப்படும் நச்சுத் தொட்டி(செப்டிக் டேங்க்) கழிவுகளை பொது இடங்களில் கொட்டினால் வாகனங்கள் பறிமுதல் செய்யப்படும் என மாநகராட்சி அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்தனர்.

திருநெல்வேலி மாநகராட்சி சுகாதாரத்துறை சார்பில், மாநகரில் இயங்கி வரும் 23 பதிவு பெற்ற நச்சுத் தொட்டி சுத்தம் செய்யும் வாகன உரிமையாளர்களுடனான ஆலோசனைக் கூட்டம் மாநகராட்சி அலுவலகத்தில் நடைபெற்றது. மாநகர ஆணையர் மோனிகா ரானா உத்தரவுப்படி நடைபெற்ற இக்கூட்டத்துக்கு, மாநகர நல அலுவலர் பாலசுப்ரமணியன் தலைமை வகித்தார். அப்போது, அதிகாரிகள் தெரிவித்ததாவது: நச்சுத் தொட்டி கழிவு மேலாண்மை விதி 2022இன் கீழ், செப்டிக் டேங்க் சுத்தம் செய்யும் வாகனங்களை மாநகராட்சியில் பதிவு செய்தல், பதிவு புதுப்பித்தல் ஆகியவற்றை முறையாக மேற்கொள்ள வேண்டும்.

செப்டிக் டேங்க் சுத்தம் செய்யும் பணியின் போது சேகரிக்கப்படும் கழிவுகளை ராமையன்பட்டியில் உள்ள பாதாள சாக்கடை கழிவுகளை கையாளும் மையத்தில் உரிய கட்டணம் செலுத்தி மட்டுமே கொட்ட வேண்டும். பதிவு பெறாமல் வாகனங்கள் இயக்கினாலோ அல்லது கழிவுகளை பொதுஇடங்களில் கொட்டினாலோ வாகனங்கள் பறிமுதல் செய்யப்படும் என தெரிவித்தனர்.

இக்கூட்டத்தில், மாநகராட்சி மண்டல சுகாதார அலுவலர்கள் பாலச்சந்தர், சாகுல் ஹமீது மற்றும் முருகன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

இன்றைய நிகழ்ச்சி

திருநெல்வேலி

அருள்மிகு ஸ்ரீ உலகு முத்தாரம்மன் திருக்கோயில்: புனருத்தாரன, ஜீர்ணோத்தாரன, அஷ்ட பந்தன மகா குடமுழுக்கு விழா, மேலப்பாளையம், காலை 9 மணி.

தினமணி

எமது செய்தியாளர்களை தொடர்பு கொள்ள...

திருநெல்வேலி

99947–83485

90950–49227

63790–37153

தமிழக மக்கள் முன்னேற்றக் கழகம் சார்பில்...

பாரதிதாசன் பிறந்த நாள் விழாவில் பங்கேற்றோர்.

திருநெல்வேலி, ஏப். 29: தமிழக மக்கள் முன்னேற்றக் கழகம் சார்பில் பாவேந்தர் பாரதிதாசனின் பிறந்த நாள் விழா புதன்கிழமை கொண்டாடப்பட்டது.

பாளையங்கோட்டை மகாராஜநகரில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு, அக்கட்சியின் மாவட்டச் செயலர் கண்மணி மாவீரன் தலைமை வகித்தார். விழாவில், பாரதிதாசனின் உருவப்படத்துக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில், தமிழக மக்கள் முன்னேற்றக் கழக தொழிற்சங்கப் பேரவை மாநில பொதுச்செயலர் மகேந்திரன், பேரவை துணைத் தலைவர் ஸ்ரீராம், மாவட்டப் பொருளாளர் முருகன், மணிகண்டன், கண்மணி சர்மிளா, சி.துரைசாமி தேவர், மாவீரர் சுந்தரலிங்கனார் மக்கள் இயக்கத் தலைவர் மா.மாரியப்பப் பாண்டியன், தமஜக மாநில துணைப் பொதுச்செயலர் அப்துல் ஜபார், தாமிர வருணி பாதுகாப்பு இயக்க மாவட்டத் தலைவர் வண்ணை. இசக்கிபாண்டியன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

திருநெல்வேலி மாநகரப் பகுதியில் பாவேந்தர் பாரதிதாசனுக்கு முழு உருவச்சிலை நிறுவ வேண்டும். ஆட்சி மொழி சட்டத்தை தமிழக அரசு முழுமையாக நிறைவேற்ற வேண்டும் ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பாளை.யில் இளம்பெண் தற்கொலை

திருநெல்வேலி, ஏப். 29: பாளையங்கோட்டையில் அதிகளவில் தூக்க மாத்திரைகளை சாப்பிட்டு இளம்பெண் தற்கொலை செய்து கொண்டார்.

பாளையங்கோட்டை, முப்பிடாதி அம்மன் கோயில் தெருவைச் சேர்ந்தவர் கண்ணன். இவரது மனைவி இந்துமதி (26). இவர் பாளையங்கோட்டை மார்க்கெட் பகுதியில் தள்ளுவண்டியில் உணவகம் நடத்தி வந்தார்.

இந்நிலையில் இவர், சில தினங்களுக்கு முன்பு வீட்டிலிருந்த தூக்க மாத்திரைகளை அளவுக்கு அதிகமாக தின்று தற்கொலைக்கு முயன்றாராம். உறவினர்கள் அவரை மீட்டு திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதித்தனர். அங்கு அவர் புதன்கிழமை உயிரிழந்தார். இது குறித்து பாளையங்கோட்டை போலீஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

பிரசவத்தில் தாய், சேய் உயிரிழப்பு: போலீஸார் விசாரணை

திருநெல்வேலி, ஏப். 29: திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரத்தில் பிரசவத்தின் போது தாய், சேய் உயிரிழந்தது குறித்து போலீஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

தென்காசி மாவட்டம், ஆழ்வார்குறிச்சி அருகே உள்ள சம்பன்குளத்தைச் சேர்ந்தவர் முகமது யூசுப். இவரது மனைவி ஜன்னத்து நிஷா(21) பிரசவத்துக்காக கடந்த 27 ஆம் தேதி காலையில் அம்பாசமுத்திரத்தில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு புதன்கிழமை மாலையில் ஆண் குழந்தை பிறந்த நிலையில் சிறிது நேரத்தில் உயிரிழந்தது. மேலும், ஜன்னத்து நிஷாவுக்கும் உடல்நலக்குறைவு ஏற்பட்டதால், அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக தனியார் அவசர ஊர்தி மூலம் இரவு 9 மணிக்கு திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துமனைக்கு கொண்டுசென்றபோது, வழியிலேயே அவர் உயிரிழந்தார். இதனால், அவரது உறவினர்கள் உடலைப் பெற்றுக்கொண்டு ஊர் திரும்புவதாக தெரிவித்த நிலையில், போலீஸார் ஜன்னத்து நிஷாவின் உடலைக் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர்.

இது குறித்து அம்பாசமுத்திரம் போலீஸார் வழக்குப்பதிந்து விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

MANAPPURAM FINANCE LTD.

CIN: L65910KL1992PLC006623,
Registered Office: W - 4/ 638A, Manappuram House,
P.O. Valapad, Thrissur - 680 567, Kerala, India

தங்க நகைகள் பொது ஏலம்

நகைகளை அடமானம் வைத்திருப்போர் மற்றும் குறிப்பாக பொதுமக்களுக்கு இதன் மூலம் தெரிவிப்பது யாதெனில், கீழ்க்கண்ட கணக்குகளில் அடமானம் வைக்கப்பட்டுள்ள தங்க நகைகளுக்கான பொது ஏலம் கீழ்க்கண்ட கிளைகளில் 16.05.2026 தேதி அன்று காலை 10 மணி யில் இருந்து நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.தங்க நகைகளை மீட்க தவறிய வாடிக்கையாளர்களின் நகைகளை, அவர்களுக்கு பதிவு தபால்கள் அனுப்பிய பிறகும், நினைவுபடுத்திய பிறகும், நாங்கள் தங்க நகைகளை ஏலம் விடுகிறோம். ஏலம் போகாத தங்க நகைகளை எவ்வித முன்னறிவிப்பின்றி எந்த ஒரு இதர நாளிலும் ஏலம் விடப்படும். ஏலம் விடப்படும் இடம் அல்லது தேதியில் ஏதேனும் மாற்றங்கள் (இருந்தால்) அவை பற்றிய அறிவிப்பு ஏலம் நடக்குமிடத்தில் எழுதி வைக்கப்படும் மற்றும் இணையதளத்தில் வெளியிடப்படும்.வேறு எந்த முன்னறிவிப்பும் அளிக்கப்படாது.

அடமானங்களின் பட்டியல் :

அம்பாசமுத்திரம், 0103330730035163, தூத்துக்குடி, சுயத்தாறு தூத்துக்குடி, 0115020700052355,

மேற்கண்ட ஏலத்தில் பங்கேற்க விரும்பும் நபர்கள் பின்வருவனவற்றைப் பின்பற்ற வேண்டும்: ஆர்வமுள்ள ஏலதாரர்கள், ஏலம் நடைபெறும் அதே நாளில், ரூ. 10,000/- தொகையை ஈஎம்டி ஆக (வெற்றி பெறாத ஏலதாரர்களுக்குத் திருப்பித் தரப்படும்) என்இஎஃப்டி/ஆர்டிஜிஎஸ் மூலம் செலுத்த வேண்டும். ஏலத்தில் பங்கேற்பவர்கள் செல்லுபடியாகும் அடையாள அட்டை/பான் கார்டை வைத்திருக்க வேண்டும். மேலும் விவரங்களுக்கு 09072607147 என்ற எண்ணைத் தொடர்பு கொள்ளவும்.

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
மணப்புரம் பைனான்ஸ் லிமிடெட்-க்காக

யூனியன் பேங்க் ஆப் இந்தியா Union Bank of India

A Government of India Undertaking

பிராந்திய அலுவலகம் திருநெல்வேலி : தரைத் தளம், BSNL நிர்வாகக் கட்டிடம், தெற்கு புறவழிச்சாலை, திருநெல்வேலி – 627 003.

கடன் வசூல் முகவர்கள் பட்டியலிடல்

யூனியன் பேங்க் ஆப் இந்தியா, திருநெல்வேலி பிராந்திய அலுவலகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பட்டியலில் (Panel), கடன் வசூல் முகவர்கள் ஆக பட்டியலிட தகுதியுள்ள நிறுவனங்களிடமிருந்து விருப்ப விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

இதற்கான தகுதி வரம்புகள் மற்றும் மாதிரி விண்ணப்பப் படிவத்தை எங்களது இணையதளத்தில் (**www.unionbankofindia.bank.in**) இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

நிறுவனங்களைப் பட்டியலிடுவது (Empanelment) என்பது வங்கியின் முழுமையான மற்றும் தனிப்பட்ட விருப்பத்திற்கு உட்பட்டது. விண்ணப்பம் சமர்ப்பிப்பது மட்டுமே ஒருவர் பட்டியலிடப்படுவதற்கு தகுதியாக கருதப்படாது. இது குறித்த முடிவுகள் பற்றி எந்தவொரு எழுத்துப்பூர்வமான தொடர்புகளும் (Correspondence) ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

விண்ணப்பித்துள்ள நிறுவனங்களின் பட்டியலில் இருந்து தகுதியுள்ள நிறுவனங்களை மட்டும் தேர்வு செய்யும் உரிமை வங்கிக்குரியது.

விண்ணப்பப் படிவ இணைப்பில் குறிப்பிட்டுள்ள தகுதி வரம்புகள் மட்டுமே இறுதியானவை அல்ல. ஒரு நிறுவனத்தைத் தேர்வு செய்யும் போது, அவற்றின் தரம் மற்றும் நற்பெயர் சார்ந்த பிற தகுதிகளையும் கருத்தில் கொள்ள வங்கிக்கு முழு அதிகாரம் உள்ளது.

முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தை, தேவையான அனைத்து ஆவணங்களுடன் இணைத்து, மேலே குறிப்பிட்டுள்ள முகவரிக்கு **21.05.2026** அன்று அல்லது அதற்கு முன்பாக சமர்ப்பிக்க வேண்டும்.

ஆர்வமுள்ள நிறுவனங்கள்/நபர்கள் கூடுதல் விவரங்களுக்கு, திருநெல்வேலி, பிராந்திய அலுவலக கடன் வசூல் பிரிவில் தொடர்பு கொள்ளலாம்.

மொபைல் : 81294 45150/78679 56800

தேதி : 30.04.2026
இடம் : திருநெல்வேலி

பிராந்தியத் தலைவர்

HDFC BANK

ஹெச் டி எஃப் சி பேங்க் லிமிடெட்

கிளை : தாகூர் தியேட்டர் ரோடு, அஞ்சல் பெட்டி எண். 2288, வழுதக்காடு, திருவனந்தபுரம் – 695010. போன்: 0471-6170373/6170372.
CIN L65920MH1994PLC080618, இணையதளம் : www.hdfcbank.com

சுவாதீன அறிவிப்பு

2002–ம் ஆண்டு கடனீட்டு சொத்துக்களை பத்திரப்படுத்துதல், நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்ட ஷரத்துக்களின்படி (சொல்லப்பட்ட சட்டம் பிரிவு 13(12)–ன் கீழ் விதி 3–ன் படி **ஹெச் டி எஃப் சி பேங்க் லிமிடெட்** (முன்னாள் ஹெச் டி எஃப் சி லிமிடெட், ஹெச் டி எஃப் சி பேங்க் லிமிடெட்டுடன், மாண்பமை NCLT மும்பையின் ஒருங்கிணைப்புத் திட்ட ஒழுங்கமைவின்படி அங்கீகரிக்கப்பட்ட 17.03.2023 தேதிய உத்தரவின் மூலம் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது) நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட அலுவலரால் கீழே விவரித்துள்ளபடி கடன்தாரர்(கள்)க்கு சட்டப்பிரிவு 13(2)–ன் கீழ் வழங்கப்பட்ட அறிவிப்புகள் பெற்றுக் கொண்ட தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் நிதி நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய தொகைகளை, சம்மந்தப்பட்ட பெயர்களுக்கு எதிராக அறிவிப்புகளில் சொல்லப்பட்டுள்ள சதவீத வட்டி மற்றும் இதர செலவுகளுடன் திருப்பிச் செலுத்தக் கோரி கேட்பு அறிவிப்பு கிடைக்கப்பெற்ற நாளிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பச் செலுத்துமாறு பணிக்கப்பட்டது.

வ. எண்.	கடன்தாரர்(கள்) பெயர் மற்றும் முகவரி	செலுத்த வேண்டிய தொகை	கேட்பு அறிவிப்பு தேதி	சுவாதீன தேதி	அசையா சொத்து / பாதுகாக்கப்பட்ட சொத்து விபரம்
1.	**திரு. செல்வகுமார் & திருமதி. மலையரசி S,** எண்.121C, ஹோம், செல்வியம்மன் கோவில் வீதி சங்கர்நகர், கரையிருப்பு திருநெல்வேலி – 627 357	***ரூ.17,92,408/– (ரூபாய் பதினேழு லட்சத்து தொண்ணூற்று இரண்டாயிரத்து நானூற்று எட்டு மட்டும்) 31.08.2025 தேதி வரை**	**01.10.2025**	**28.04.2026**	திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி இணை 2 சார் பதிவகம், திருநெல்வேலி தாலூகா, நாரணம்மாள்புரம் கிராமம், அயன் புஞ்சை சர்வே எண்.836/2 ல் 3¼ சென்ட் நிலம் மற்றும் அதன் மீதுள்ள கட்டிடம் உள்பட சொத்திற்கான எல்லைகள்: அம்மன் சன்னதி வீதிக்கு மேற்கு, பொது வீதிக்குத் தெற்கு, வெங்கடசாமி நாயுடு வீட்டுச் சொத்திற்கு வடக்கு, முனியம்மாள் கோமதி தேவருக்கு விற்ற சொத்திற்குக் கிழக்கு. மேலே குறிப்பிட்ட சொத்தின் வடபுற பகுதியில் வழித்தட உபயோக உரிமையாக 1 சென்ட் சொத்தில் ¼ சென்ட் உடன்.
2.	**திரு. ஸ்ரீகுமார் தங்கநாடார் & திருமதி. ஜான்சி ஸ்ரீகுமார்** 1–85 A, தோட்டத்து விளாகம் பள்ளிக்கோணம், அருமனை கன்னியாகுமரி – 629 151	***ரூ.19,74,893/– (ரூபாய் பத்தொன்பது லட்சத்து எழுபத்து நான்காயிரத்து எண்ணூற்று தொண்ணூற்று மூன்று மட்டும்) 30.06.2024 தேதி வரை**	**01.08.2024**	**28.04.2026**	கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தாலூகா, வெள்ளம்கோடு கிராமம், மறு சர்வே எண்.478/1C1, பழைய சர்வே எண்.3014 ல் 237.98 சதுர மீட்டர் நிலம் மற்றும் அதன் மீதுள்ள கட்டிடம் உள்பட சொத்திற்கான எல்லைகள் : மேற்கு – ரோடு, தெற்கு – ராம்ஜெகனின் சொத்து, வடக்கு – ராஜேஸ்வரனுக்குச் சொந்தமான 'B' அட்டவணைச் சொத்து, கமலாபாய்க்குச் சொந்தமான 'C' அட்டவணைச் சொத்து, கிழக்கு –அசோகன் சொத்து.
3.	**திரு. மரிய சாபு கிறிஸ்தவன் பிள்ளை & விதியா ஜாக்ஸ் அந்தோணி சேவியர்** எண்.3/8/124, தூதூர் ஏழுதேசம் பஞ்சாயத்து, நாகர்கோயில் கன்னியாகுமரி – 629 176	***ரூ.19,67,890/– (ரூபாய் பத்தொன்பது லட்சத்து அறுபத்து ஏழாயிரத்து எண்ணூற்று தொண்ணூறு மட்டும்) 30.06.2025 தேதி வரை**	**05.08.2025**	**28.04.2026**	கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தாலூகா, ஏழுதேசம் கிராமம், தூதூர் தேசம், ஜென்மம் மறு சர்வே எண்.296/1A1A1A, பழைய சர்வே எண்.1594/2 ல் 402.02898 சதுர மீட்டர் (9.934 சென்ட்) நிலம் மற்றும் அதன் மீதுள்ள கட்டிடம் உள்பட சொத்திற்கான எல்லைகள் : சூசை அடிமையின் சொத்திற்கு மேற்கு, தனத்து கிடப்பு சொத்திற்கு வடக்கு, செலின் சொத்திற்குத் தெற்கு, ரோட்டுக்குக் கிழக்கு.
4.	**திரு. கமலா பாய் வில்சன் & திரு. வில்சன் யோவெல்** 6/34E, கோவிகிளத்துவிளை கோல்வெல், கல்குளம் திருவரம்பு கன்னியாகுமரி – 629 161	***ரூ.9,68,220/– (ரூபாய் ஒன்பது லட்சத்து அறுபத்து எட்டாயிரத்து இருநூற்று இருபது மட்டும்) 30.11.2025 தேதி வரை**	**27.12.2025**	**28.04.2026**	கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் தாலூகா குலசேகரம் B கிராமம் (பழைய திருவட்டார் கிராமம்), கோல்வெல் தேசம், சர்வே எண்.561/13 ல் 04.05 ஏர் (4356 சதுரடி) (10 சென்ட்) நிலம் மற்றும் அதன் மீதுள்ள கட்டிடம் உள்பட சொத்திற்கான எல்லைகள் ; ஜான்சன் சொத்திற்கு மேற்கு, ஜான்சன் சொத்திற்கு வடக்கு, சசியின் சொத்திற்குத் தெற்கு, வாய்க்காலுக்குக் கிழக்கு.
5.	**திரு. பினீஷ் ஜான் வில்சன் & திரு. ஜான் வில்சன் செல்லப்பன்** 6/66, செருதிக்கோணம் கண்டனச்சேரி விளை கல்குளம் கன்னியாகுமரி – 629 161	***ரூ.3,44,054/– (ரூபாய் மூன்று லட்சத்து நாற்பத்து நான்காயிரத்து ஐம்பத்து நான்கு மட்டும்) 31.10.2025 தேதி வரை**	**25.11.2025**	**28.04.2026**	கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் தாலூகா, பொன்மனை கிராமம், மறு சர்வே எண்.127/4 ல் 2395.8 சதுரடி (5½ சென்ட்) (222.65 சதுர மீட்டர்) நிலம் உள்ள சொத்திற்கான எல்லைகள் ; சதீஷ் சொத்திற்கு மேற்கு, யேசுதாஸ் சொத்திற்குத் தெற்கு, A அட்டவணைச் சொத்திற்கு வடக்கு, நேசையன் சொத்திற்குக் கிழக்கு.

* பொருத்தக்கூடிய கூடுதல் வட்டி மற்றும் பிற செலவுகளுடன், தொகையை திருப்பிச் செலுத்தும் காலம் வரை.

மேற்சொன்ன கடன்தாரர்(கள்) மேலே சொல்லப்பட்ட கடன் தொகையை முழுவதுமாகச் செலுத்த மறுதலிப்பதாலும், தவறியதாலும், மேலே சொல்லப்பட்ட அறிவிப்பு கடன்தாரர்(கள்)க்குக் குறிப்பாகவும், பொதுமக்களுக்குப் பொதுவாகவும் இதன்மூலம் தெரிவித்துக் கொள்வது என்னவெனில் சட்டப் பிரிவு 13(4)ன் படியும் மேற்படி சட்டவிதிகள் விதி எண். 8ன் படியும் அவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் கீழே ஒப்பமிட்டுள்ள அலுவலர் மேலே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்(களை) அடையாளக் (Symbolic) கையகப்படுத்தியுள்ளார்.

கடன்தாரர்(கள்) குறிப்பாக பொதுமக்கள் மேலே குறிப்பிட்டுள்ள அசையாச் சொத்து(கள்) / பாதுகாக்கப்பட்ட சொத்துக்(கள்) குறித்து எந்த தொடர்பும் வைத்துக் கொள்ளக் கூடாது என்று எச்சரிக்கப்படுவதுடன், அவ்வாறு மேற்கொண்டால் **ஹெச் டி எஃப் சி பேங்க்**–க்கு சேரவேண்டிய மேலே குறிப்பிட்டுள்ள தொகை, வட்டி மற்றும் இதர செலவுகளுடன் சேர்த்து செலுத்த வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உட்படும் என இதன் மூலம் அறிவிக்கிறார்.

பிணையமாக்கப்பட்ட சொத்துக்களை மீட்பதில் கால அவகாசத்தைக் கருத்தில் கொள்ளும்படி, சட்டத்தின் பிரிவு 13(8)க்கு கடன்தாரர்(கள்) கவனம் ஈர்க்கப்படுகிறது.

தேதி : 29.04.2026
இடம் : திருவனந்தபுரம்

ஒம்/–
அங்கீகரிக்கப்பட்ட அலுவலர்
ஹெச் டி எஃப் சி பேங்க் லிமிடெட்–க்காக

பதிவு அலுவலகம் : ஹெச் டி எஃப் சி பேங்க் ஹவுஸ், சேனாபதி பபட் மார்க், லோயர் பேரல் (மேற்கு), மும்பை – 400013

வீட்டில் நகை திருட்டு: பெண் கைது

திருநெல்வேலி, ஏப். 29: தாழையூத்து அருகே வீடு புகுந்து தங்க நகைகளை திருடியதாக பெண்ணை போலீஸார் கைது செய்தனர்.

தாழையூத்து அருகே உள்ள ராஜவல்லிபுரம், வேதக்கோயில் தெருவைச் சேர்ந்த தம்பதி முருகேசன்(52)- கோமதி. இவர்களது வீட்டின் அலமாரியில் வைக்கப்பட்டிருந்த சுமார் 19 கிராம் தங்க நகைகளை மர்மநபர்கள் திருடிச்சென்றிருப்பது கடந்த 26 ஆம் தேதி தெரியவந்தது. இதுகுறித்து கோமதி தாழையூத்து காவல் நிலையத்தில் அளித்தபுகாரின் பேரில், போலீஸார் வழக்குப்பதிந்து விசாரித்தனர். அதில், அதே பகுதி சப்பாணிமாடன் கோயில் தெருவைச் சேர்ந்த வெள்ளைப்பாண்டி மனைவி மகராசி(36) என்பவருக்கு தொடர்பிருப்பது தெரியவந்தது. அவரை போலீஸார் புதன்கிழமை கைது செய்தனர்.

சாலை விபத்தில் ஓட்டுநர் உயிரிழப்பு

களக்காடு, ஏப். 29: திருநெல்வேலி மாவட்டம், ஏர்வாடி அருகே பழுதாகி நின்றுகொண்டிருந்த கண்டெய்னர் லாரி மீது கார் மோதியதில் அதன் ஓட்டுநர் நிகழ்விடத்திலேயே புதன்கிழமை உயிரிழந்தார்.

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் புதுக்குடியிருப்பு ஆபிரகாம் தெருவைச் சேர்ந்தவர் மோனி கங்காதரன்(60). வாடகை கார் ஓட்டுநரான இவர், புதன்கிழமை அதிகாலை நாகர்கோவிலில் இருந்து பயணிகள் சிலரை ஏற்றிக்கொண்டு திருநெல்வேலிக்குச் சென்றாராம். அங்கு பயணிகளை இறக்கி விட்டு, மீண்டும் நாகர்கோவிலுக்கு திரும்பினார்.

அப்போது, ஏர்வாடி - வள்ளியூர் இடையேயான நான்குவழிச்சாலையில் பாலத்தைத் தாண்டி கார் வந்தபோது, சாலையில் பழுதாகி நின்றுகொண்டிருந்த கண்டெய்னர் லாரி மீது மோதியது. இதில் மோனி கங்காதரன் நிகழ்விடத்திலேயே உயிரிழந்தார். இதுகுறித்து ஏர்வாடி போலீஸார் வழக்குப் பதிந்துவிசாரணை நடத்தி வருகின்றனர்.

போக்ஸோ வழக்கில் பழ வியாபாரிக்கு 5 ஆண்டுகள் சிறை

திருநெல்வேலி,ஏப்.29: திருநெல்வேலியில்போக்ஸோ வழக்கில் கைதான பழ வியாபாரிக்கு 5 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து திருநெல்வேலி மாவட்ட போக்ஸோ சிறப்பு நீதிமன்றம் புதன்கிழமை தீர்ப்பளித்தது.

திருநெல்வேலி நகரம், அகிலாண்டபுரம் பகுதியைச் சேர்ந்தவர் முருகன்(50). பழ வியாபாரி. இவர் கடந்த 2024 ஆம் ஆண்டு 11 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை அளித்தாராம். இது குறித்து சிறுமியின் பெற்றோர் அளித்த புகாரின் பேரில் திருநெல்வேலி நகரம் அனைத்து மகளிர் காவல் நிலைய போலீஸார், போக்ஸோ சட்டத்தின்கீழ் வழக்குப்பதிந்து முருகனை கைது செய்தனர்.

திருநெல்வேலி போக்ஸோ சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த இவ்வழக்கை நீதிபதி சுரேஷ்குமார் விசாரித்து, முருகனுக்கு 5 ஆண்டுகள் சிறைத்தண்டனையும், ரூ.6,000 அபராதமும் விதித்து தீர்ப்பளித்தார். மேலும் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு ரூ.1 லட்சம் நிவாரணம் வழங்கவும் உத்தரவிடப்பட்டது. அரசு தரப்பில் வழக்குரைஞர் உஷா வாதிட்டார்.

பாளை. சிறையில் கைதிகள் மோதல்: இருவர் காயம்

திருநெல்வேலி, ஏப்.29: பாளையங்கோட்டை சிறையில் விசாரணைக் கைதிகள் மோதிக்கொண்டதில் இருவர் காயமடைந்தனர்.

பாளையங்கோட்டை மத்திய சிறையில் சுமார் 1,300-க்கும் மேற்பட்ட விசாரணை மற்றும் தண்டனை கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர். இதில் விசாரணை கைதிகள் அடைக்கப்பட்டுள்ள சிறைக்கூடத்தில் செவ்வாய்க்கிழமை இரவு தூங்கும் இடம் தொடர்பாக கைதிகளுக்கிடையே பிரச்னை ஏற்பட்டதாம்.

பின்னர், புதன்கிழமை மாலையில் மீண்டும் ஏற்பட்ட தகராறில் இருதரப்பாக பிரிந்து ஒருவரையொருவர் தாக்கிக் கொண்டனராம். இதில் 2 பேர் காயமடைந்தனர். அவர்களுக்கு சிறை வளாகத்தில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது.

இதுகுறித்து சிறை அதிகாரி அளித்த புகாரின்பேரில், பெருமாள்புரம் போலீஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.